بسم الله الرحمن الرحيم نحمده ونصلى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

02 ஷவ்வால் 1440 ஹிஜ்ரி கமரி 06 இஹ்ஸான் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

06 ஜூன் 2019


**அல்லாஹ்வின் கட்டளை**

وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا فَلَنْ يُّقْبَلَ مِنْهُ ۚ وَهُوَ فِي الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ ○

இஸ்லாம் அல்லாத வேறு (ஏதாவது) மார்க்கத்தை (மேற்கொள்ள) விரும்புபவனிடமிருந்து (அது) ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது (என்பதற்காகவும்) அவன் மறுமையில் இழப்புக்குரியோனுமாவான் (என்பதையும் அவன் நினைவில் கொள்ளட்டும்). (3:86)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இறையச்சமுடையவரின் அந்தஸ்து தொடர்பாக وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ அதாவது அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்

### வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுதல்**

இறையச்சதைப் பெறுவதற்கு நான் கூறியது போன்று சிறிதளவாவது துன்பத்தை மேற்கொள்ள வேண்டியது வருகிறது. எனவேதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

هُدًى لِّلْمُتَّقِيْنَ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ (2:3,4)

ஒன்றினைச் சோதித்துப் பார்ப்பதற்குப் பதிலாக மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுவதற்கு ஒரு வகையான துன்பத்தை மேற்கொள்வதை விரும்புகின்றது. எனவே இறையச்சமுடையவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் துன்பத்தை மேற்கொள்ள வேண்டியது வருகிறது. ஏனென்றால் அவர் ஸாலிஹ் என்ற அந்தஸ்தை அடைந்த பிறகு மறைவானவை அவருக்கு மறைவானவையாக இருப்பதில்லை. ஏனென்றால் ஸாலிஹ் என்ற நிலையில் அவர் இருக்கின்ற போது அவருக்குள் ஒரு நதி ஓடுகின்றது. அந்த நதியானது அவரை இறைவன் வரை கொண்டு சேர்க்கின்றது. மேலும் அவர் இறைவன் மீது கொண்ட பேரன்பின் காரணமாக தமது கண்களால் مَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى அதாவது இ(ந்த உலகத்)தில் குருடராக இருப்பவர் மறுமையிலும் குருடராகவே இருப்பார் (17:73) என்பதனைப் பார்த்து விடுகின்றார்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், எப்போது வரை மனிதன் முழு ஒளியையும் இவ்வுலகில் பெற்றுக் கொள்வதில்லையோ அப்போது வரை அவர் ஒருபோதும் இறைவனது முகத்தைக் காண மாட்டார். மேலும் இதிலிருந்து தெரிய வருவது என்வென்றால், இறையச்சமுடையவர் ஆரம்பத்தில் குருடராக இருக்கின்றார். பல்வேறு முயற்சிகள் மற்றும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பிறகு அவர் ஒளியைப் பெறுகின்றார். இந்நிலையை அவர் அடைந்தபிறகு அவர் ஸாலிஹ் ஆகின்றார். பிறகு மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வது அவருக்குக் கஷ்டமாக இருப்பதில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த உலகத்திலேயே சொர்க்கம் மற்றும் நரகம் போன்ற அனைத்தையும் காண்பிக்கப்பட்டது. அந்த விஷயத்தை ஓர் இறையச்சமுடையவர் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுதல் என்ற ரீதியில் ஏற்றுக் கொள்ள வேண்டியது வருகிறது. ஆனால் அந்த அனைத்தையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு நம்பிக்கையாளர் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்கின்றார். அதுவே அவரது உண்மைக்கான நிலையாகும். இந்த உண்மையை ஏற்றுக் கொண்டதால் அல்லாஹ் அவரைக் குறித்து اُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ அதாவது இவர்களே வெற்றிக்குரியவர்கள் ஆவர் என்று வாக்குறுதி வழங்குகின்றான்.

**தொழுகையை நிலைநாட்டுதல்**

இதற்குப் பிறகு இறையச்சமுடையவரின் அந்தஸ்து தொடர்பாக وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இங்கு நிலைநாட்டுவர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவும் ஒரு நம்பிக்கையாளர் மேற்கொள்கின்ற சோதனையின் பக்கமே சைகையாகச் சுட்டிக் காட்டியுள்ளது. அதாவது அவர் தொழ ஆரம்பிக்கும்போது பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியதுள்ளது. இதன் காரணமாக அவரது தொழுகை பல முறை விழும் நிலைக்குச் சென்று விடுகிறது.

அவர் அல்லாஹு அக்பர் என்று கூறும்போது ஒருவிதமான இடையூறு அவரது உள்ளத்தில் வருகின்றது. அது அவரை எங்கேயோ கொண்டு சென்று விடுகிறது. அவர் தொழுகையில் இன்பம் கிடைப்பதற்குப் பெரும் சண்டையிடுகின்றார். அவரது தொழுகை வீழ்ந்து விடக்கூடிய நிலைக்குச் செல்கிறது. அவர் பெரும் முயற்சி செய்தவாறு தொழுகையை நிலைநாட்டுவதற்கு மிகுந்த கவலை கொள்கின்றார். அவர் மீண்டும் மீண்டும் اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ என்று கூறித் தொழுகையை நிலைநாட்டுவதற்கு துஆ கேட்கின்றார். இவ்வாறு அவர் الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற வழிகாட்டலை கேட்கின்றார். அதன் மூலம் அவரது தொழுகையை நிலைநாட்டி விட வேண்டும் என விரும்புகின்றார்.

இந்த இடையூறுகளுக்கு எதிராக ஒரு இறையச்சமுடையவர் ஒரு குழந்தையைப் போன்று இறைவன்முன் விழுகின்றார். மேலும் அவனிடத்தில் அழுதவாறு, நான் பூமியின் பக்கம் சாய்ந்து கொண்டிருக்கின்றேன் என்று கூறுகின்றார். ஆக இந்த சண்டையையே ஓர் இறையச்சமுடையவருக்குத் தொழுகையில் தனது ஆன்மாவோடு செய்ய வேண்டியதிருக்கிறது.

ஹஸ்ரத் ஷேக் அப்துல் காதிர் ஜைலானி (ரஹ்) அவர்களின் கூற்று என்னவென்றால், எப்போது வரை முயற்சிகள் செய்யப்படுமோ அப்போது வரை அதற்கான நற்கூலி கிடைக்கும். ஆனால் எப்போது முயற்சிகள் செய்யப்படுவது முடிவுறுமோ அப்போது நற்கூலியும் முடிவுற்று விடும். ஆக எப்போது வரை தொழுகையில் ஏற்படுகின்ற இடையூறுகளுடன் நாம் சண்டையிட்டவாறு முயற்சி செய்தவாறு தொழுகையை நிலைநாட்டுவோமோ அப்போது வரை அதற்கான கூலி கிடைத்துக் கொண்டே இருக்கும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 18,19)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்விற்கு உதவியாளராக இருப்பவர்களுக்கு அல்லாஹ் உதவியாளமான இருக்கின்றான். மேலும் எவன் அவனை நிராகரித்தானோ அவனை அவன் இழிவுபடுத்தக் கூடியவனாக இருக்கின்றான்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட பெருமானார் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் உபைதா பின் அபூ உபைதா அன்ஸாரி அவ்ஸி (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் நுஃமான் பின் பல்தமா (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமைர் (ரலி), ஹஸ்ரத் உமர்பின் ஹாரிஸ் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் சல்மா பின் அஸ்லம் (ரலி), ஹஸ்ரத் உக்பா பின் உஸ்மான் (ரலி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஹல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் ரபீஆ ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹுஸூர் அவர்கள் குத்பாவிற்குப் பிறகு ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் பேத்தியும், தமது மாமியும், மதிப்பிற்குரிய மிர்ஸா அன்வர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியுமான சாஹிப்ஸாதி சபீஹா பேகம் சாஹிபா அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹுஃத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03 மே 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற பத்ர் போர் சஹாபாக்களில் முதலாவது சஹாபி ஹஸ்ரத் உபைது (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னாரது முழுப் பெயர் ஹஸ்ரத் உபைது பின் அபூ உபைது அன்ஸாரி முஹ்ஸி ஆகும். இப்னு ஹிஷாமிற்கேற்ப அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் குடும்பமான பனு உமய்யாவைச் சேர்ந்தவர்கள். ஹஸ்ரத் உபைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது, அகழ் போர்களில் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 243 உபைது பின் அபீ உபைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா பக்கம் 538,539 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 465 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவர்களைக் குறித்து இது தவிர வேறு எந்த விளக்கமும் இல்லை.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் நுஃமான் பின் பல்தமா ஆகும். ஹஸ்ரத் அப்தில்லாஹ் அவர்களின் பாட்டனாரின் பெயர் பல்தமா அல்லது பல்ஸமா என்றும் கூறப்படுகின்றது. ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் நுஃமான் அவர்கள் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் குடும்பமான பனு ஹன்னாஸைச் சேர்ந்தவர்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 417 ஸிக்ர் மின் பனீ ஹன்னாஸ் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா பக்கம் 213 அப்துல்லாஹ் பின் நுஃமான் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் நுஃமான் அவர்கள் ஹஸ்ரத் அபூ கிதாதா அவர்களின் சிறிய தந்தையின் மகனாவார்கள். ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் நுஃமான் அவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 293 தப்காத்துல் பத்ர் பைன மினல் அன்ஸார்/அப்துல்லாஹ் பின் நுஃமான் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் உமைர் (ரலி) ஆகும். அன்னார் பனு ஜுதாரா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். ஒரு கூற்றிற்கேற்ப அன்னாரின் தந்தையின் பெயர் உமைர் என்பதற்குப் பதிலாக உபைது என்றும் கூறப்பட்டுள்ளது. அதே போன்று சிலர் அன்னாரின் பாட்டனாரின் பெயரை அதீ என்றும், சிலர் ஹாரிஸா என்றும் கூறியுள்ளனர். இப்னு ஹிஷாம் அவர்கள், அன்னாரைக் குறித்து அன்னார் பனு ஜுதாரா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இப்னு இஸ்ஹாக் அவர்கள் பனு ஹாரிஸா கோத்திரத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 277 அப்துல்லாஹ் பின் உமைர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 467 மின் பனி ஜுதாரா – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 172 அப்துல்லாஹ் பின் உமைர் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இருவருமே வரலாற்றாசிரியர்கள் ஆவர்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அம்ர் பின் ஹாரிஸ் ஆகும். அன்னார் பனு ஹாரிஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். சிலர் அன்னாரது பெயர் அமர் என்றும் வேறு சிலர் ஆமிர் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ ராஃபி ஆகும். ஹஸ்ரத் அம்ர் அவர்கள் ஆரம்ப காலத்திலேயே மக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அன்னார் இரண்டாவது முறையாக அபிஸீனியாவிற்கு செய்யப்பட்ட ஹிஜ்ரத்தில் பங்கு பெற்றார்கள். அன்னாருக்கு பத்ர் போரில் பங்கு பெறும் நற்பேறு கிடைத்தது.

(அஸதுல் காபா ஃபி மஃரூஃபத்துஸ் சஹாபா லாபின் அஸீர் தொகுதி 4 பக்கம் 197 உமர் பின் ஹாரிஸ் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது &

அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 463 பாப் மின் ஹஸர பத்ர் மினல் முஸ்லிமீன் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபி மஃரூஃபத்துல் அஸ்ஹாப் லாபி உமர் தொகுதி 3 பக்கம் 255 உமர் பின் ஹாரிஸ் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் கஅப் ஆகும். அன்னார் பனு மாஸன் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். அன்னாரது தந்தையின் பெயர் கஅப் பின் அம்ர் ஆகும். அன்னாரது தாயாரின் பெயர் ரியாப் பின்த் அப்தில்லாஹ் ஆகும். அன்னார் அபூ லைலா மாஸ்னியின் சகோதரர் ஆவார். அன்னாரது ஒரு மகனின் பெயர் ஹாரிஸ் ஆகும். இவர் ஸஹீனா பித் அவ்ஸின் வயிற்றில் பிறந்தார்கள். அன்னார் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாரை போரில் கிடைத்த செல்வத்திற்குக் கண்காணிப்பாளராக நியமித்தார்கள்.

அதுமட்டுமின்றி மற்ற சந்தர்ப்பங்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் போரில் கிடைத்த செல்வங்களை கண்காணிக்கும் பொறுப்பு அன்னாருக்கு கிடைத்துள்ளது. அன்னார் உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் கஅப் அவர்கள் மதீனாவில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 33 ஆம் ஆண்டில் வஃபாத்தானார்கள். அன்னாரது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் தொழ வைத்தார்கள். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ ஹாரிஸ் மட்டுமின்றி அபூ யஹ்யா என்றும் கூறப்படுகின்றது.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 268 அப்துல்லாஹ் பின் கஅப் பின் உமர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 370 அப்துல்லாஹ் பின் கஅப் பின் உமர் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 475 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபி மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 105 அப்துல்லாஹ் பின் கஅப் அல்மாஸினி – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் கைஸ் ஆகும். அன்னார் பனு நஜ்ஜாரைச் சேர்ந்தவர். வாழ்க்கை வரலாறு மற்றும் வரலாற்று நூல்களில் பெரும்பாலான இடங்களின் அன்னாரது பாட்டனாரின் பெயர் காலித் என்ற வந்துள்ளது. இந்த இருவரின் தாயாரின் பெயர் சவாத் பின்த் கைஸ் ஆகும். இது தவிர அன்னாருக்கு உம்மே அவ்ன் என்ற ஒரு மகளும் இருக்கின்றார்கள். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள்.

அப்தில்லாஹ் பின் முஹம்மது பின் அம்மாரா அன்ஸாரியின் கூற்றிற்கேற்ப அன்னார் உஹது போரில் ஷஹீதானார்கள் என்று வந்துள்ளது. மற்ற கூற்றிற்கேற்ப அன்னார் உஹது போரில் ஷஹீதாகவில்லை. மாறாக, அன்னார் உயிரோடு இருந்தார்கள் என்று வந்துள்ளது. அன்னார் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 258 அப்துல்லாஹ் பின் கைஸ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 474 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

வரலாற்று நூலில் பல்வேறு இடங்களில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. எனவே அதனை நான் எடுத்துக் கூறி விடுகின்றேன்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் ஆகும். அன்னார் பனு ஹாரிஸா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். அன்னாரின் தந்தையின் பெயர் அஸ்லம் ஆகும். ஒரு கூற்றிற்கேற்ப அன்னனாரின் பாட்டனாரின் பெயர் ஹரீஷ் என்றும் இன்னொரு கூற்றிற்கேற்ப ஹுரைஷ் என்றும் வந்துள்ளது. அன்னாரது சுட்டுப்பெயர் அபூ சஅது ஆகும்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 464 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபி மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 198 சலமா பின் அஸ்லம் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தாயாரின் பெயர் சவாத் பின்த் ராஃபி ஆகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பத்ர் போரில் சாயிப் பின் உபைது மற்றும் நுஃமான் பின் அம்ர் ஆகியோரை அன்னார் கைது செய்தார்கள். ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஜிஸ்ர் போரில் ஷஹீதானார்கள்.

ஜிஸ்ர் போர் ஃபராத் நதிக்கரையில் நடந்தது. இதைப் பற்றிய விளக்கத்தை நான் கடந்த குத்பாக்களில் எடுத்துக் கூறியுள்ளேன். அந்த போர் முஸ்லிம்களுக்கும், ஈரானைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற மிகப்பெரிய போர் ஆகும். ஜிஸ்ர் என்பது ஒரு பாலத்தின் பெயராகும். நதியில் ஒரு பாலம் கட்டப்பட்டது. அந்த பாலம் வழியாக முஸ்லிம்கள் வேறு இடங்களுக்கு சென்றார்கள். இந்தப் போரில் ஈரானியர்கள் யானையையும் பயன்படுத்தினார்கள். எவ்வாறிருப்பினும் போரில் இரு தரப்பினருக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. குறிப்பாக முஸ்லிம்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அறிவிப்பிற்கேற்ப அன்னாரது மரணம் ஏறக்குறைய 38 வது வயதில் நிகழ்ந்தது என்று கூறப்படுகிறது.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 236 சலமா பின் அஸ்லம் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 516 சலமா பின் அஸ்லம் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா லா பின் ஹிஜ்ர் அஸ்கலானி தொகுதி 3 பக்கம் 120 சலமா பின் அஸ்லம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & மொழியாக்கம் தாரீக் இப்னு ஹல்தூன் தொகுதி 3 முதல் பகுதி பக்கம் 271 – 2003 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அல்லாமா நூருத்தீன் அவர்களின் புகழ்பெற்ற நூலான சீரத்தே ஹல்பிய்யாவில் பத்ர் போரில் பெருமானார் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது என்னவென்றால், பத்ர் போரில் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்களின் வாள் உடைந்து விட்டது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு பேரீத்தம் பழ மரத்தின் கிளை ஒன்றை கொடுத்தவாறு, இதனைக் கொண்டு சண்டையிடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்கள் இதனை தமது கையில் எடுத்தவுடன் அதுவொரு சிறந்த வாளாக மாறி விட்டது. பிறகு அது எப்போதும் அன்னாரிடமே இருந்தது.

(அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 2 பக்கம் 245 ஸிக்ர் மகாஸிய்யா (ஸல்) கஸ்வா பத்ருல் குப்ரா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஷரஹ் ஸர்கானி மற்றும் தலாயிலுல் நுபுவ்வத்தில் இவ்வாறு உள்ளது. அதாவது பத்ர் போர் நாளில் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்களின் வாள் உடைந்து விட்டது. அவர்களின் கையில் எதுவும் இருக்கவில்லை. ஆயுதமில்லாமல் இருந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு ஒரு கிளையை கொடுத்தவாறு, இதனைக் கொண்டு சண்டையிடுங்கள் என்று கூறினார்கள். எனவே அது ஒரு சிறந்த வாளாக மாறி விட்டது. அந்த வாளானது ஜிஸ்ர் போரில் அன்னார் மரணமடையும் வரை அன்னாரிடம் இருந்தது.

(ஷரஹ் ஸர்கானி அலல் மவாஹிப் லித் துன்யா தொகுதி 2 பக்கம் 302 பாப் கஸ்வா பத்ருல் குப்ரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தலாயிலுன் நுபுவ்வத் லில் பைஹக்கி தொகுதி 9 பக்கம் 99 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அகழ் போர் தொடர்பாக இப்னு சஅது அவர்கள் எழுதுகின்றார்கள்: அகழ் போரின் சந்தர்ப்பத்தில் முஹாஜிரீன்களின் கொடி ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸாவிடம் இருந்தது. மேலும் அன்ஸார்களின் கொடி ஹஸ்ரத் சஅது பின் இபாதாவிடம் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்களை 200 நபர்களைக் கொண்ட குழுவிற்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அந்த கொடிக்குக் கீழ் பல்வேறு குழுக்கள் இருந்தன. மேலும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா அவர்களை 300 நபர்களைக் கொண்ட குழுவிற்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். மேலும் அவர்கள் மதீனாவிற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றும் உரத்த குரலில் தக்பீர் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு டியூட்டி கொடுக்கப்பட்டது. அதற்கான காரணம் என்னவென்றால், எங்கு குழந்தைகளை பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்தார்களோ அங்கு பனு குரைழாவைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் இருந்தது.

(அயூனுல் அஸர் தொகுதி 2 பக்கம் 88 கஸ்வா ஹன்தக் – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்களையும் கொலை செய்ய ஒரு சூழ்ச்சி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப அவர்கள் எழுதுகின்றார்கள்: அஹ்ஸாப் போரில் தோல்வியுடன் திரும்பிச் சென்றது குரைஷிகளிடம் மிகவும் கடுமையாக கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த கோபத்தின் நெருப்பானது மக்காவின் தலைவரான அபூ சுஃப்யானிடம் மிகுதியாகவே காணப்பட்டது. ஏனென்றால் அஹ்ஸாப் போரானது அவரை இழிவடையச் செய்திருந்தது. சில காலம் வரை அபூ சுஃப்யான் இந்த கோபத்தின் நெருப்பில் தம்மைத்தாமே ஆளாக்கிக் கொண்டிருந்தார். ஆனால் இறுதியில் அவரது கோபம் இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் நெருப்பின் ஜுவாலையானது அவரிடமிருந்து வெளிப்பட ஆரம்பித்தது. அதன் வெளிப்பாடு ஆரம்பித்தது. உண்மையில் நிராகரிப்பவர்களின் உண்மையான பகைமை பெருமானார் (ஸல்) அவர்களின் இருப்பின் மீதே இருந்தது.

எனவே அபூ சுஃப்யான், வெளிப்படையான காரணிகள், திட்டங்கள், சூழ்ச்சிகள் மற்றும் போர்களினால் எந்த விளைவும் ஏற்படாததைக் கண்டு மறைமுகமான திட்டம் மற்றும் சூழ்ச்சியின் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களைக் கொன்று விட வேண்டும் என்று எண்ணம் கொண்டார். ஏன் அவ்வாறு அவன் திட்டம் தீட்டப்படவும் கூடாது? ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் எந்தவொரு சிறப்பான பாதுகாப்பும் இருக்காது. மாறாக சில நேரங்களில் அன்னார் பாதுகாப்பின்றி அங்கும் இங்கும் சென்று வந்தார்கள். நகரத்தின் தெருக்களில் சென்று வருவார்கள். மஸ்ஜிது நபவியில் தினமும் குறைந்தது ஐந்து நேரத் தொழுகைக்கு அன்னார் சென்று வந்தார்கள். பயணத்தில் சுதரந்திரமாக இருந்தார்கள். இதை விடச் சிறந்த சந்தர்ப்பம் அன்னாரைக் கொலை செய்வதற்கு வேறு என்னவாக இருக்க முடியும்? என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

இந்த எண்ணம் வந்ததுமே அபூ சுஃப்யான் பெருமானார் (ஸல்) அவர்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் மிகவும் உறுதி கொண்டவராகத் திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்தார். அவ;ர முழுமையான எண்ணத்துடன் இதில் ஈடுபட ஆரம்பித்ததும் ஒரு நாள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவாறு குரைஷிகளைச் சார்ந்த சில இளைஞர்களிடம், மதீனாவிற்குச் சென்று மறைந்திருந்தவாறு முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் எந்த ஆண் மகனும் உங்களில் இல்லையா? முஹம்மது வெளிப்படையாகவே தெருக்களில் சுற்றித் திரிவார் என்று கூறினார்.

இதனை அவர் தனது நாவிலிருந்து கூறியதை இளைஞர்கள் செவியேற்றனர். அவரது கூற்று அந்த இளைஞர்களின் உள்ளத்தில் பதிந்தது. இவ்வாறு சில நாட்கள் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள், ஒரு தீய இளைஞன் அபூ சுஃப்யானிடம் வந்து, நான் உங்களது திட்டங்களைக் கேட்டேன். நான் இதற்காக ஆயத்தமாக இருக்கின்றேன். நான் வலிமையான உள்ளத்தைக் கொண்ட, உறுதித்தன்மை கொண்ட மனிதன் ஆவேன். எனது பிடி மற்றும் தாக்குதலிருந்து எவரும் தப்பிக்க முடியாது.

எனவே நீங்கள் இந்தப் பணிக்காக என்னை நியமித்து எனக்கு உதவி செய்தால் நான் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காகச் செல்லத் தயாராக இருக்கின்றேன். மேலும் என்னிடம் மறைமுகமாக வைத்துக் கொள்ளும் வகையில் ஒரு கத்தியும் இருக்கிறது. எனவே நான் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தாக்குத்ல் தொடுத்து பிறகு அங்கிருந்து ஓடிச் சென்று ஏதாவதொரு குழுவினருடன் இணைந்து கொள்வேன். இவ்வாறு முஸ்லிம்கள் என்னைப் பிடிக்க முடியாது. மேலும் நான் மதீனாவின் வழிப்பாதைகளையும் நன்கு அறிந்திருக்கின்றேன் என்று கூறினான்.

இதனைக் கேட்டு அபூசுஃப்யான் நமது எண்ணத்தைக் கொண்ட ஒருவன் கிடைத்து விட்டான் என்று மகிழ்ச்சியடைந்தார். இதற்குப் பிறகு அபூ சுஃப்யான் அந்த இளைஞனுக்கு வேகமாக செல்லக்கூடிய ஒரு ஒட்டகத்தை பயணத்திற்காக வழங்கி பயணச் செலவையும் வழங்கி அவனை அனுப்பி வைத்தார். மேலும் இந்த இரகசியம் எவருக்கும் தெரிந்து விடக் கூடாது என்றும் அறிவுறுத்தினார். மக்காவிலிருந்து வெளியேறிய இந்த இளைஞன் பகலில் ஒளிந்தாவறும் இரவில் பயணம் செய்தவாறும் மதீனானை நோக்கிச் சென்றான். பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி கேட்டறிந்தவாறு நேரடியாகவே பனி அப்துல் அஷ்ஹலின் கோத்திரத்தின் பள்ளிவாசலுக்குச் சென்றான். அப்போது அங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அந்த நேரத்தில் புதிய புதிய மக்கள் மதீனாவிற்கு வந்து கொண்டிருந்தனர். எனவே இவர் எந்த எண்ணத்தில் வந்துள்ளார் என்பது முஸ்லிம்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் பள்ளிக்குள் நுழைந்து தம் பக்கம் வருவதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள், இந்த நபர் ஏதோவொரு தீய எண்ணத்தில் வந்துள்ளார் என்று கூறினார்கள்.

இந்த சொற்களை அன்னார் உரத்த குரலில் கூறினார்கள். இந்த சொற்களைக் கேட்ட அவன் வேகமாக அன்னாரை நோக்கி வந்தான். ஆனால் உஸைது பின் ஹுஸைர் என்ற ஒரு அன்ஸாரி தலைவர் அவனைப் பிடித்தார்கள். அவனைப் பிடிக்கின்ற முயற்சியில் அவனிடம் மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தியும் அவன் மீது பட்டது. எனவே பதற்றமடைந்தவாறு அவன் என்னை நீ காயப்படுத்தி விட்டாய் என்று கூறினான். அவன் பிடிக்கப்பட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவனிடம், நீங்கள் யார், எந்த எண்ணத்தில் வந்துள்ளீர்கள்? என்று உண்மையைக் கூறுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவன், எனது உயிர் மன்னிக்கப்படுமாயின் நான் கூறுவேன் என்று கூறினான். அதற்கு அன்னார், நிச்சயமாக, நீங்கள் அனைத்து உண்மையான விஷயங்களையும் கூறி விட்டால் பிறகு நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள் என்று கூறினார்கள்.

எனவே அவன் இந்த அனைத்து நிகழ்வுகளையும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினான். மேலும், அபூ சுஃப்யான் இந்த இந்த வெகுமதிகளை வழங்குவதாக கூறினார் என்றும் அவன் கூறினான். இதற்குப் பிறகு இந்த மனிதர் சில நாட்களுக்கு மதீனாவில் தங்கினார். பிறகு தமது விருப்பத்திற்கேற்பவே முஸ்லிமாகி பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றைக் கேட்டு, முஸ்லிம்களுடன் இருந்தார். பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

கொலை செய்ய வேண்டும் என்ற அபூ சுஃப்யானின் சூழ்ச்சியானது மக்கத்து மக்களின் எண்ணம் மற்றும் நோக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை மிகவும் உறுதிப்படுத்தியது. எனவே அன்னார் அவர்களின் நோக்கம் என்ன? இதற்காக அவர்கள் என்ன மறைமுகமான சூழ்ச்சிகளைச் செய்கின்றனர் என்பதனைத் தெரிந்து கொள்வதற்காக அம்ர் பின் உமைய்யா ஸம்ரி மற்றும் சலமா பின் அஸ்லம் (இவர்களைப் பற்றிதான் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது) ஆகிய தமது இரண்டு சஹாபாக்களை மக்காவிற்கு அனுப்பி வைத்தவாறு, அபூ சுஃப்யானின் கொலை செய்யும் சூழ்ச்சி மற்றும் அவன் இதற்கு முன்பு கொலை செய்ய மேற்கொண்ட நடவடிக்கை ஆகியவற்றிற்காக, சந்தர்ப்பம் கிடைத்தால் இஸ்லாத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்திய எதிரிகளைக் கொன்று விடுவதற்கும் அன்னார் அனுமதி வழங்கினார்கள்.

ஆனால் உமைய்யாவும் அவர்களுடன் இருந்தவரும் மக்காவைச் சென்றடைந்ததும் குரைஷிகள் விழிப்படைந்தனர். இந்த இரண்டு சஹாபாக்களும் தமது உயிரைக் காப்பாற்றியவாறு மதீனா திரும்பினார்கள். வழியில் அவர்களுக்கு குரைஷிகளின் இரண்டு உளவாளிகள் கிடைத்தனர். இந்த இருவரையும் குரைஷிகளின் தலைவர்கள் முஸ்லிம்களின் செயல்பாடுகளைக் குறித்தும், பெருமானார் (ஸல்) அவர்களின் நிலைமைகளைக் குறித்தும் தெரிந்து கொண்டு வருவதற்காக அனுப்பி வைத்திருந்தனர்.

முதலில் அனுப்பியதைப் போன்று குரைஷிகள் இந்த இருவரையும் கூட பெருமானார் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காகச் சூழ்ச்சி செய்து அனுப்பி இருக்கலாம். ஆனால் அல்லாஹ்வின் அருளாகும். உமைய்யா மற்றும் சலமா பின் அஸ்லம் ஆகியோருக்கு இந்த உளவாளிகள் பற்றி தெரிய வந்ததும் அவர்கள் இந்த உளவாளிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களைக் கைது செய்ய விரும்பினர். ஆனால் அவர்களும் சண்டையிட்டதனால் ஒரு உளவாளி கொல்லப்பட்டான். மற்றொருவனைக் கைது செய்து மதீனாவிற்கு அழைத்து வந்தனர்.

இது தொடர்பாக வரலாற்றாசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இப்னு ஹிஷாம் அவர்கள் இதனை ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டில் நடைபெற்றது என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இப்னு சஅது அவர்கள் இதனை ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் நடைபெற்றது என்று குறிப்பிடுகின்றார்கள். அல்லாமா கிஸ்தலானி மற்றும் ஸர்கானி இப்னு சஅதின் அறிவிப்பிற்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவர்கள் அனைவரின் கருத்தையும் ஆய்வு செய்தவாறு எழுதுகின்றார்கள்: நானும் இதனை ஹிஜ்ரி 6 வது ஆண்டில் நடைபெற்றதாகவே குறிப்பிடுகின்றேன். அல்லாஹ்வே நன்கறிந்தவன். இப்னு சஅதின் அறிவிப்பிற்கு பைஹக்கி அவர்களும் அதற்கு ஆதரவு அளித்துள்ளார்கள். ஆனால் இதில் இந்த சம்பவத்தின் காலம் தொடர்பாக எதுவும் தெரியவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 741–743)

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்களின் குறிப்பு காணப்படுகிறது. ஹஸ்ரத் உம்மே அம்மாரா கூறுகின்றார்கள்:

ஹுதைபிய்யா உடன்படிக்கை நாளன்று பெருமானார் (ஸல்) அவர்களை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அன்னார் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷர் மற்றும் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் ஆகிய இருவரும் கவசம் அணிந்திருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகிலல் நின்று கொண்டு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தனர். அப்போது குரைஷிகளின் தூதுவர் சுஹைல் பின் அம்ர் தமது குரலை உயர்த்திப் பேசிய போது இந்த இருவரும் அவரிடம் உங்களது குரலை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் உயர்த்தாதீர்கள். மெதுவாக பேசுங்கள் என்று கூறினார்கள்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 2 பக்கம் 93 பாப் கஸ்வா ஹுதைபிய்யா – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இந்த தொண்டு அவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குறிப்பான சம்பவமாகும்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உக்பா பின் உஸ்மான் ஆகும். ஹஸ்ரத் உக்பா பின் உஸ்மான் அவர்களின் தாயாரின் பெயர் உம்மே ஜமீல் பின்த் குத்பா ஆகும்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 300 வ மன் பனீ ஸுரைக் பின் ஆமிர் பின் ஸுரை.... – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அன்னார் அன்ஸார்களின் பனூ ஸுரைக் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் உக்பா மற்றும் அன்னாரது சகோதரரான ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் ஆகிய இருவரும் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார்கள்.

பல்வேறு வரலாற்று நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது உஹது போர் சந்தர்ப்பத்தில் கடுமையான தாக்குதலின் காரணமாக தற்காலிகமாக மைதானத்தை விட்டு ஓடினார்கள். இவர்களில் ஹஸ்ரத் உக்பா பின் உஸ்மான் மற்றும் ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் ஆகிய இரண்டு நபர்களும் அடங்குவர். எதுவரை என்றால் அவர்கள் அப்போது ஒரு மலைக்கு சென்று விட்டார்கள். அங்கு மூன்று நாட்கள் தங்கினார்கள். அஹூஸ் மதீனாவிலிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள ஒரு பகுதியாகும். பிறகு இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து நடந்த விஷயத்தைப் பற்றி கூறியபோது பெருமனார் (ஸல்) அவர்கள், நீங்கள் எந்தப் பக்கம் சென்றீர்களோ அங்கு பரந்த இடமாக இருந்தது என்று கூறினார்கள். (மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 180)

எவ்வாறிருப்பினும் அவர்களின் தவறை அன்னார் கண்டும் காணாமல் விட்டுட்டார்கள். அதைக் குறித்து எதுவும் கூறவில்லை.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் சஹல் ஆகும். அன்னார் அபூ ஸுரைக் கோத்திரத்தைச் சார்ந்தவர். அது பனு அப்துல் அஷ்ஹலின் நட்புக் கோத்திரமாகும். ஹஸ்ரத் அப்தில்லாஹ் அவர்களின் பெயர் ஸைது என்றும் ராஃபி என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னாரின் தாயாரின் பெயர் சஃபா பின்த் தய்யிஹான் ஆகும். அவர்கள் அபூ ஹைஷம் பின் தய்யிஹானின் சகோதரி ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் ராஃபி பின் சஹலின் சகோதரர் ஆவார். அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். அன்னாரது சகோதரரான ஹஸ்ரத் ராஃபி அவர்கள் அன்னாருடன் உஹது போரில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அப்தில்லாஹ் அகழ் போரில் ஷஹீதானர்கள். அபூஉவைஃபைச் சேர்ந்த ஒரு நபர் அன்னார் மீது அம்பு எய்து ஷஹீதாக்கினான்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 236 அப்துல்லாஹ் பின் சஹல் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ தமீஸுஸ் சஹாபா லா பின் அஸீர் தொகுதி 3 பக்கம் 269 அப்துல்லாஹ் பின் சஹல் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 464 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது )

முகைரா பின் ஹகீம் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அப்தில்லாஹ் அவர்களிடம், நீங்கள் பத்ர் போரில் பங்கு பெற்றீர்களா? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், ஆமாம்! மேலும் நான் பைஅத்தே உக்பாவிலும் கலந்து கொண்டேன் என்று கூறினார்கள்.

(மஜ்மவுல் சவாயித் தொகுதி 6 பக்கம் 108 கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 10044 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹம்ராவுல் அஸது போரில் கலந்து கொண்டது தொடர்பாக சபலுல் ஹுதாவில் இவ்வாறு காணப்படுகிறது. இது மதீனாவிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். (மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 181)

அதாவது ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் சஹல் மற்றும் ஹஸ்ரத் ராஃபி பின் சஹல் ஆகிய இரு சகோதரர்களும் பனு அப்துல் அஷ்ஹலைச் சார்ந்தவர்கள். அவர்கள் இருவரும் உஹது போரிலிருந்து திரும்பி வந்த போது மிகவும் கடுமையாக காயமுற்றிருந்தார்கள். போரில் காயமுற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அப்தில்லாஹ் மிக அதிகமாக காயமுற்றிருந்தார்கள். இந்த இரண்டு சகோதரர்களும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹம்ராவுல் அஸதில் கலந்து கொள்ள சென்றுள்ளதையும், அதில் கலந்து கொள்வது தொடர்பாக அன்னாரது கட்டளைப் பற்றி கேள்விப்பட்டதும் ஒருவர் மற்றவரிடம், நாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹம்ரா போரில் கலந்து கொள்ளவில்லை என்றால் இது நமக்கு மிகப்பெரிய பேரிழப்பாகும் என்று கூறினார்.

இருவரும் காயமுற்றிருந்தார்கள். இருப்பினும் அவர்களிடம் ஓர் உணர்வு இருந்தது. ஈமானில் உறுதி இருந்தது. மீண்டும் கூறினார்கள்: நம்மிடம் பயணத்திற்கான எந்த வசதியும் இல்லை. மேலும் இந்தப் பணியை எவ்வாறு செய்வது என்பதும் நமக்குத் தெரியாது என்று கூறினார். அதற்கு அப்தில்லாஹ் அவர்கள், என்னுடன் வாருங்கள்! நாம் நடந்து செல்வோம் என்று கூறினார்கள். அதற்கு ராஃபி அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! காயமுற்றிருப்பதன் காரணமாக என்னால் நடப்பதற்கான ஆற்றல் இல்லை என்று கூறினார். அதற்கு அவரது சகோதரர் வாருங்கள்! நாம் நடந்தவாறு மெதுவாக செல்வோம். நபி (ஸல்) அவர்களிடம் செல்வோம் என்று கூறினார்கள்.

எனவே இருவரும் நடந்து சென்றனர். ஹஸ்ரத் ராஃபி அவர்கள் பலவீனத்தை உணர்ந்தபோது ஹஸ்ரத் அப்தில்லாஹ் அவர்கள் ஹஸ்ரத் ராஃபி அவர்களை தமது முதுகில் தூக்கி வைத்துக் கொள்வார்கள். பிறகு சிறிது நேரம் நடந்து செல்வார்கள். இருவருமே காயமுற்றிருந்தார்கள். ஆனால் எவர் நல்ல நிலையில் இருந்தாரோ அவர்கள் அதிக காயமுற்றிருந்தவரைத் தமது முதுகில் தூக்கிக் கொண்டு சென்றார். ஆனால் நபி (ஸல்) அவர்களை நோக்கி சென்று கொண்டே இருந்தார்கள். பலவீனத்தின் காரணமாக அவர்களால் அசைய கூட முடியாமல் இருந்தது. சில சமயங்களில் இவ்வாறான நிலை இருந்தது.

இறுதியாக அவர்கள் இருவரும் இஷா நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். சஹாபாக்கள் அந்த நேரத்தில் நெருப்பை மூட்டிக் கொண்டிருந்தனர். இரவு நேரமாக இருந்தது. இவர்கள் இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார்கள். அந்த இரவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்கள் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இருவரிடமும், எந்த விஷயம் உங்களைத் தடுத்து நிறுத்தியது என்று கேட்டார்கள். அதற்கு இருவரும் அதற்கான காரணத்தைக் கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இருவருக்காகவும் நன்மையை வேண்டி துஆ செய்தவாறு, உங்கள் இருவருக்கும் அல்லாஹ் நீண்ட ஆயுளை வழங்கினால் உங்களுக்கு குதிரை, ஒட்டகம் போன்ற வாகனங்கள் கிடைப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். இப்போது நீங்கள் விழுந்து எழுந்து இங்கு வந்துள்ளீர்கள். ஆனால் நீண்ட ஆயுளைப் பெற்றால் இந்த அனைத்து வாகனங்களும் உங்களுக்குக் கிடைப்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.

ஆனால் அத்துடன் அன்னார் (ஸல்) அவர்கள் இதனையும் கூறினார்கள். அதாவது, அது உங்கள் இருவருக்கும் நீங்கள் நடந்து விழுந்து எழுந்து வந்த இந்தப் பயணத்தை விட சிறந்ததாக இருக்காது. இதற்குரிய கூலி உங்களுக்கு வழங்கப்படும். இதன் அருட்கள் மிக மிக அதிகமாகும் என்று கூறினார்கள்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் ஃபீ சீரத் கைருல் அபாதுல் முஹம்மது பின் யூசுஃப் தொகுதி 4 பக்கம் 310 ஹம்ராபுல் அஸது – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹம்ராவுல் அஸது போர் என்ன? இந்த மக்கள் எதற்காக பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் சென்றார்கள்? என்பது தொடர்பான சில விளக்கங்களை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள். அது இதுவாகும்: விளக்கம் இதுவாகும்.

உஹது போருக்குப் பிறகு வந்த அந்த இரவு மதீனாவில் மிகவும் அச்சத்திற்கு இரவாக இருந்தது. ஏனென்றால் குரைஷி படையினர் மக்காவிற்குச் சென்று விட்டனர் என்றாலும் அவர்களது நடவடிக்கை முஸ்லிம்களைக் கவனமற்றவர்களாக ஆக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக இருக்கலாம் என்ற அச்சம் இருந்தது. வெளிப்படையாக அவர்கள் உஹது போர்க்களத்தில் வெற்றி பெற்றி பெற்று மக்காவிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் முஸ்லிம்களுக்கு அவர்கள் ஏதேனும் சூழ்ச்சி செய்து அல்லது திரும்பி வந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து விடக்கூடாது என்ற கவலை இருந்தது. எனவே அந்த இரவில் மதீனாவில் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த தற்காப்பு நடவடிக்கையின் காரணமாக சந்தேகத்தின் காரணமாக

பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு குறிப்பாக பாதுகாப்பு பணியை இரவில் சஹாபாக்கள் மேற்கொண்டனர்.

காலை விடிந்ததும் அந்த அச்சம் வெறும் எண்ணத்தினால் ஏற்பட்டதல்ல என்பது தெரிய வந்தது. ஏனென்றால் ஃபஜர் தொழுகைக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, குரைஷி படையினர் மதீனாவிலிருந்து சில மைல் தொலைவில் தங்கியுள்ளனர். மேலும் மக்கத்து தலைவர்களுக்குள், இந்த வெற்றியிலிருந்து பயன் பெற்றவாறு மதீனாவின் மீது ஏன் தாக்குதல் தொடுக்கப்படக் கூடாது என்று வாக்குவாதம் செய்து கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி கிடைத்தது.

மேலும் குரைஷிகள் ஒருவர் மற்றவரைப் பார்த்து, நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்யவும் இல்லை. மேலும் முஸ்லிம் பெண்களை அடிமையாக ஆக்கவும் இல்லை. மேலும் அவர்களின் செல்வங்களை அபகரிக்கவும் இல்லை என்று கிண்டலாகக் கூறி வந்தனர். எனவே நீங்கள் அவர்கள் மீது வெற்றி பெற்றுள்ளீர்கள். எனவே இப்போது அவர்களை முழுமையாக அழிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தும் அவர்களை விட்டு விட்டு வந்துள்ளீர்களே? இப்போது உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே நீங்கள் திரும்பிச் சென்று மதீனாவின் மீது தாக்குதல் நடத்தி முஸ்லிம்களின் அடித்தளத்தையே வெட்டி விடுங்கள் என்றும் கூறி வந்தார்கள்.

இதற்கு மாற்றமாக வேறு சிலர் இவ்வாறு கூறி வந்தனர். அதாவது உங்களுக்கு ஒரு வெற்றி கிடைத்துள்ளது. அதனை பொருள் செல்வமாக கருதி மக்காவிற்குத் திரும்பிச் செல்லுங்கள். இல்லையென்றால் இந்தக் கண்ணியத்தையும் நீங்கள் இழந்து நிற்க வேண்டியது வரும். மேலும் இந்த வெற்றி தோல்வியின் வடிவில் உங்களுக்கு மாறி விடலாம். ஏனென்றால் இப்போது நீங்கள் மீண்டும் மதீனாவிற்கு திரும்பித் தாக்குதல் தொடுத்தால் நிச்சயமாக அவர்கள் உயிரை அர்ப்பணித்தவாறு சண்டையிடுவர். மேலும் எவர்கள் உஹது போரில் கலந்து கொள்ளவில்லையோ அவர்களும் கலந்து கொள்வதற்காக வருகை தருவர்.

ஆனால் இறுதியில் மன எழுச்சியுடன் செயல்பட்டவர்களின் கூற்றே வெற்றி பெற்றது. இந்த விஷயம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்ததும் அன்னார், முஸ்லிம்கள் ஆயத்தமாகுங்கள் என்று கூறியதுடன் உஹது போரில் பங்கு பெற்றவர்களைத் தவிர வேறு எவரும் நம்முடன் வர வேண்டாம் என்றும் கட்டளையிட்டார்கள். எனவே உஹது போரில் கலந்து கொண்ட பெரும்பான்மையான காயமுற்றவர்கள் தமது காயங்களைக் கட்டியவாறு தமது அன்பிற்குரிய தலைவருக்குப் பின்னால் சென்றார்கள்.

மேலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் எந்த அளவுக்கு மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனும் சென்றார்கள் என்றால் வெற்றி பெற்ற படை எதிரியைப் பின் தொடர்வதைப் போன்று அது சென்றது. எட்டு மைல் தூரத்தை கடந்து ஹம்ராவுல் அஸதை பெருமானார் (ஸல்) அவர்கள் சென்றடைந்தார்கள். அங்கு இரண்டு முஸ்லிம்களின் உடல் மைதானத்திலிருந்து அவர்களுக்கு கிடைத்தது.

ஆய்வில் அந்த உடல்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்து குரைஷிகளின் எண்ணங்களை தெரிந்து கொண்டு வருதற்காக அனுப்பிய இருவரின் உடல்களாகும் என்பது தெரிய வருகிறது. ஆனால் குரைஷிகள்அவர்களை சந்தர்ப்பம் பார்த்து கொலை செய்து விட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு ஒரு கபர் தோண்டி அதில் இருவரையும் நல்லடக்கம் செய்தார்கள். அந்த நேரம் மாலை நேரமாக ஆகிவிட்டதால் அன்னார் அங்கேயே கூடாரத்தை அமைக்கக் கட்டளையிட்டவாறு, களத்தில் பல்வேறு இடங்களில் நெருப்பை மூட்டுமாறும் கட்டளையிட்டார்கள். பரந்த இடத்தில் நெருப்பு மூட்டப்பட்டது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஹம்ராவுல் அஸது மைதானத்தில் 500 நெருப்பு மூட்டப்பட்டது. அந்த நெருப்பானது தொலை தூரத்திலிருந்து பார்க்கக் கூடியவரையும் அச்சமூட்டக் கூடியதாக இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் இணை வைப்பவர்களைச் சேர்ந்த கஸாஆவின் கோத்திரத்தின் தலைவனான மஃபத் என்ற பெயருடைய ஒருவன் பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தான். அன்னாரிடம் உஹது மைதானத்தில் கொலை செய்யப்பட்டவர்களைக் குறித்து தமது அனுதாபத்தை வெளிப்படுத்தினான். பிறகு தமது வழியில் அவர் சென்று விட்டார்.

அடுத்த நாள் மதீனாவிலிருந்து 40 மைல் தொலைவிலுள்ள ரூஹா என்ற இடத்தை அவர் அடைந்ததும் குரைஷிகளின் படை கூடாரம் அமைத்திருப்பதையும், வாக்குவாதம் செய்தவாறு அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பி வருவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருப்பதையும் பார்த்த மஃபத் அபூ சுஃப்யானிடம் சென்று, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இப்போது தான் முஹம்மது (ஸல்) அவர்களின் படையை ஹம்ராவுல் அஸதில் விட்டு விட்டு வந்தேன். இத்தகைய அச்சமூட்டக்கூடிய படையை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அவர் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் எந்த அளவுக்கு எழுச்சியுடன் காணப்படுகின்றார்கள் என்றால் உங்களைப் பார்த்தவுடன் பொசுக்கி விடுவார்கள். தின்று விடுவார்கள். கொன்று விடுவார்கள் என்று கூறினார்.

அபூ சுஃப்யான் மற்றும் அவனுடன் இருந்தவர்களுக்கு மஃபத் கூறிய கூற்றின் தாக்கம் ஏற்பட்டது. அந்த அச்சத்தினால் அவர்கள் மதீனாவிற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு விட்டு மக்காவிற்குத் திரும்பிச் சென்றனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குரைஷிகளின் படை திரும்பிச் சென்ற செய்தி கிடைத்தும் அன்னார் அல்லாஹ்விற்கு நன்றி தெரிவித்தார்கள். மேலும் கூறினார்கள்: இது குரைஷிகளின் உள்ளத்தில் அல்லாஹ் ஏற்படுத்திய அச்சமாகும் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அன்னார் ஹம்ராவுல் அஸதில் மூன்று நாட்கள் தங்கினார்கள். பிறகு மதீனா திரும்பிச் சென்றார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) பக்கம் 504,505)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உத்பா பின் ரபீஆ ஆகும். அன்னார் கிஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். வரலாற்றாசிரியர்களிடம் இது தொடர்பாகக் கருத்து வேறுபாடு இருக்கின்றது.

இப்னு இஸ்ஹாக் அவர்கள், அன்னார் பனூ லேஸான் கோத்திரத்தின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றும் பஹ்ரா கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றும் கூறுகின்றார்கள். மேலும் சிலர் அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்று கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார்கள்.

அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி கூறுகின்றார்கள்: யர்மூக் போரில் கலந்து கொண்டவர்களில் உத்பா பின் ரஆபீ வின் பெயரும் வருகின்றது. அவர்கள் கூறுகின்றார்கள்: எனது பார்வையில் இவரே அந்த சஹாபி ஆவார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 284
உத்பா பின் ரபீஆ பின் காலித் – 1996 ஆம் ஆண்டு
பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது &
அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 469 – 2001 ஆம்
ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில்
அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி

3 பக்கம் 360 உத்பா பின் ரபீஆ பின் காலித் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

யர்மூக் போர் பற்றிய விளக்கம் இவ்வாறாகும். இந்த போர் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு மதீனா திரும்பியபோது அன்னார் ஹிஜ்ரி 13 வது ஆண்டின் துவக்கத்தில் முஸ்லிம்களின் படையை சிரியாவிற்கு அனுப்பினார்கள். மேலும் அம்ர் பின் ஆஸ் அவர்களை பாலஸ்தீனத்திற்கும், யஸீது பின் அபூ சுஃப்யான், ஹஸ்ரத் உதைா பின் அல் ஜராஹ் மற்றும் ஹஸ்ரத் ஷர்ஜபீல் பின் ஹஸ்னா ஆகியோரிடம் சிரியாவின் யல்கா வழியாக சென்றவாறு தபூகிய்யா செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்கள் முதலில் காலித் பின் வலீத் அவர்கள் அமீராக நியமித்திருந்தார்கள். பிறகு அவர்களது இடத்தில் யஸீது பின் சுஃப்யான்அவர்களை நியமித்தார்கள். இந்த மக்கள் 7000 முஜாஹிதீன்களோடு சிரியா நாட்டை நோக்கிச் சென்றார்கள். இஸ்லாமிய படைகளின் அமீர்கள் தமது படைகளை அழைத்துக் கொண்டு சிரியா சென்றனர்.

ஹெர்கிலும் ஹமஸிற்கு வந்தான். மேலும் ரோமானியர்களின் மிகப்பெரிய படையை ஆயத்தம் செய்தான். அவன் முஸ்லிம்களுடன் போர் செய்வதற்காக தனித் தனி அமீரை நியமித்தான். எதிரிகளின் படையைக் கண்டு ஈமானில் முழுமைத் தன்மை இல்லாதவர்கள் மீது அதன் தாக்கம் ஏற்பட்டது. ஏனென்றால் அந்த நேரத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 27000 ஆகும். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள், நீங்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று சேருங்கள் என்று வழிகாட்டல் வழங்கினார்கள்.

ஏனென்றால் ஒன்று சேர்வதனால் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் உங்களை வெற்றி கொள்வது சாதாரண விஷயமல்ல. எண்ணிக்கையைப் பொருத்தவரை நீங்கள் மிகக் குறைவானவர்களே. ஆனால் நீங்கள் ஒன்றிணைந்து விட்டால் எளிதாக உங்களை வெற்றி பெற முடியாது. தனித்தனியாக இருந்தால் பிறகு நினைவில் கொள்ளுங்கள். உங்களில் ஒருவர் கூட உங்களுக்கு முன்னால் இருப்பவருக்கு உதவி செய்ய முடியாது.

எனவே யர்மூக் என்ற இடத்தில் அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுசேர்ந்து விட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த ஆலோசனையைத் தான் ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்களும் முஸ்லிம்களுக்கு வழங்கினார்கள். மேலும் கூறினார்கள்: ஒன்று சேர்ந்து ஒரு படையாக ஆகி விடுங்கள். உங்களது படையை இணை வைப்பவர்களின் படையை விட அதிகமாக இருக்கும்படி செய்யுங்கள். அல்லாஹ்விற்கு நீங்கள் உதவியாளர் ஆவீர்கள். அல்லாஹ்விற்கு உதவி செய்யக் கூடியவருக்கு அல்லாஹ் உதவியாளனாக இருக்கின்றான். எவன் அவனை மறுப்பானோ அவனை அவன் இழிவுபடுத்தக் கூடியவனாக இருக்கின்றான்.

அபூ பக்ர் அவர்கள் மேலும் இந்த தூதுச் செய்தியையும் வழங்கி இருந்தார்கள்: அதாவது எவ்வித சந்தேகமுமின்றி நீங்கள் குறைவானவர்களே. ஆனால் ஈமான் இருக்குமென்றால் மேலும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால் பிறகு உங்களைப் போன்றவர்கள் குறைவான எண்ணக்கையில் இருந்தாலும் தோல்வியடைய மாட்டீர்கள். ஏனென்றால் நீங்கள் இறைவனுக்காக சண்டையிடுகின்றீர்கள்.

எனவே நீங்கள் பாவத்திலிருந்து தப்பியுங்கள். உங்களை நீங்கள் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். ஒன்றாகி விடுங்கள். ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். யர்மூக்கில் ஒன்றிணைந்து செயல்படுவதற்காக இணைந்து விடுங்கள். உங்களிலுள்ள ஒவ்வொரு அமீரும் தமது படையுடன் தொழுயை நிறைவேற்றுங்கள். ஹிஜ்ரி 13 வது ஆண்டு சஃபர் மாதத்திலிருந்து ரபீவுஸ் சானி மாதத்திற்குள் முஸ்லிம்கள் ரோமானிய படையை சுற்றி வளைத்தனர். எனினும் தற்போது வரை முஸ்லிம்களுக்கு இந்த இடைப்பட்ட காலத்தில் வெற்றி கிடைக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை யர்மூக் சென்றடைய கட்டளையிட்டார்கள். காலித் பின் வலீத் அவர்கள் அப்போது ஈராக்கில் கவர்னராக இருந்தார்கள். ஹஸ்ரத் காலித் அங்கு செல்லும் வரை அனைத்து அமீர்களும் தனித்தனியாக தமது படைகளுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் அங்கு சென்றடைந்த பிறகு அனைத்து முஸ்லிம்களையும் ஒரு அமீரை நியமிக்குமாறு அறிவுரை கூறினார்கள். அதன் அடிப்படையில் அனைவரும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை அமீராக தேர்ந்தெடுத்தார்கள். ரோமானிய படையின் எண்ணிக்கை ஏறக்குறைய 2,40,000 ஆகும். இதற்கு நேர்மாற்றமாக முஸ்லிம்களின் எண்ணிக்கை 37,000 லிருந்து 47,000 என்று கூறப்படுகின்றது. ஏறக்குறைய ஐந்தில் ஒரு பகுதி ஆகும்.

ரோமானிய படையின் ஆற்றல் என்னவாக இருந்ததென்றால், அவர்களில் 80000 நபர்களின் கால்களில் சங்கிலிகள் போடப்பட்டிருந்தன மேலும் 40000 நபர்கள் ஒன்றாக சங்கிலியால் கட்டப்பட்டிருந்தனர்.இதன் மூலம் அவர்கள் தமது உயிரை கொடுக்க வேண்டுமேயொழிய மைதானத்தை விட்டு ஓடுவதற்கான எண்ணமே வரக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்யப்பட்டிருந்தது. 1,20,000 நபர்களை ஏன் இவ்வாறு கட்டப்பட்டிருந்தனர் என்றால் அவர்கள் சண்டையிடவே செய்ய வேண்டும் மேலும் அதிலேயே மரணிக்க வேண்டும். அது தவிர வேறு எதுவும் செய்யக் கூடாது. இது தவிர 40000 நபர்கள் தம்மை தலைப்பாகையால் கட்டிக் கொண்டனர். மேலும் 80000 நபர்கள் பயணத்திற்கான வாகனத்திலும், மேலும் 80000 பேர் நடந்து வருபவர்களாக இருந்தனர். எண்ணற்ற பாதிரிகள் படையினரிடம் உத்வேகத்தை ஏற்படுத்துவதற்காக ரோமானிய படையுடன் வந்திருந்தனர்.

அந்த போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்கள் ஜமாஅதிவுல் ஊலாவில் நோயுற்றார்கள். மேலும் ஜமாதிவுல் ஆகிரில் அன்னார் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் இந்தப் போரில் முஸ்லிம்களின் படையை பல படையாக பிரித்திருந்தார்கள். அது 36 லிருந்து 40 வரை இருந்தது என்று கூறப்படுகின்றது. ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே அமீருக்கு கீழ் போர் செய்தார்கள். இந்த படைகளில் ஒரு படைக்கு ஹஸ்ரத் உத்பா பின் ரபீஆ அவர்கள் கண்காணிப்பாளராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் கூறினார்கள்: எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாகும். ஆனால் நாம் ஏற்படுத்திய வழிமுறைகளைப் பார்க்கின்ற போது முஸ்லிம்களின் படை எதிரிகளை விட அதிகமாக இருப்பதைப் போன்று தெரியும்.

முஸ்லிம்களுக்கு எந்த அளவுக்கு தைரியம் இருந்தது என்பதை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். அதாவது ஏறக்குறைய இவர்களில் ஆயிரம் பேர் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தை கண்டிந்தார்கள். 100 சஹாபாக்கள் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் பத்ர் போரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். இரு தரப்பினருக்கும் கடுமையான போர் நடைபெற்றது. அப்போது மதீனாவிலிருந்து செய்தி தெரிவிக்கக்கூடிய ஒருவர் ஏதோவொரு செய்தியை கொண்டு

வந்தார். அங்கிருந்தவர்கள் அவரைத் தடுத்து நிறுத்தி எல்லாம் நன்றாகத்தானே இருக்கின்றது? என்று கேட்டனர்.

ஆனால் உண்மை சம்பவம் என்னவென்றால், அவர் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மரணச் செய்தியை கொண்டு வந்திருந்தார். மக்கள் செய்தி கொண்டு வந்தவரை ஹஸ்ரத் காலித் பின் வலீதிடம் கொண்டு சேர்த்தார்கள். அவர் மிகவும் இரகசியமாக ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மரணச் செய்தியை காலித் அவர்களுக்கு தெரிவித்தார்கள். ஹஸ்ரத் காலித் அவர்கள் அவரிடமிருந்து அந்த கடிதத்தைப் பெற்றுக் கொண்டு அம்புகளை வைக்கின்ற இடத்தில் அதை வைத்தார்கள். ஏனென்றால் இந்த செய்தி பரவினால் அபாயகரமான சூழல் உருவாகும் நிலை இருந்தது. தற்போது சண்டையிட்டுக் கொண்டிருப்பதைப் போன்று முஸ்லிம்கள் சண்டையிட மாட்டார்கள் என்ற அச்சம் நிலவியது.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் நிலைத்து நின்றனர். மாலை நேரம் வரை சண்டை நீடித்தது. அதற்குப் பிறகு ரோமானிய படை பின்வாங்கி ஓடியது. இந்த சண்டையில் ஒரு லட்சத்தை விட அதிகமான ரோமானிய படையைச் சார்ந்தவர்கள் அழிந்து போயினர். மேலும் **3000** முஸ்லிம்கள் இந்த போரில் ஷஹீதாகினர். இந்த ஷுஹதாக்களில் ஹஸ்ரத் இக்ரிமா மற்றும் அபூ ஜஹிலும் அடங்குவர். கைஸருக்கு இந்த செய்ததி சென்று சேர்ந்தபோது அவர் அந்த நேரத்தில் ஹமஸில் இருந்தார். அவர் உடனேயே அங்கிருந்து வெளியேறினார்.

யர்மூக் போருக்குப் பிறகு இஸ்லாமிய படை முழு சிரியாவிலும் பரவியது. கன்ஸ்ரீன், இன்தாகியா, ஜூமா, சர்மீன், தீஸீன், கூரஸ், தில் ஆஸாத், துலூக், ரஃபான் போன்ற இடங்களை மிக எளிதாக வெற்றி பெற்றது.

(தாரீக் அத்திப்ரா தொகுதி 4 பக்கம் 53–63 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிப்படப்பட்டது)

இன்று நான் எடுத்துக் கூற இருந்த சஹாபாக்கள் இவ்வளவுதான். இனி ரமலானுக்குப் பிறகே இவர்களின் நற்குறிப்பு எடுத்துக் கூறப்படும். இன்ஷா அல்லாஹ். ரமலான் அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பமாக இருக்கின்றது.

இப்போது நான் ஒரு நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பேரனான ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் பேத்தியான மதிப்பிற்குரிய ஸாஹிப்ஸாதி சபீஹா பேகம் சாஹிபா உடையதாகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மூத்த மகளின் மகளாவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் ஹஸ்ரத் உம்மே நாஸிர் (ரலி) அவர்களின் மகனான ஸாஹிப் ஸாதா மிர்ஸா அன்வர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். **30** ஏப்ரல் அன்று தமது **90** வது வயதில் தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இந்த உறவின் அடிப்படையில் அவர்கள் எனது மாமி ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ஏற்கனவே நான் கூறியிருந்தேன். அதாவது அன்னார் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மூத்த மகளான அம்மத்தஸ் சலாம் சாஹிபா அவர்களின் மகளாவார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்கள் தமது குடும்பத்தில் இறுதியாக கலந்து கொண்ட திருமணம் இவர்களுடையதுதான். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மனைவியாக ஹஸ்ரத் செய்யிதா ஆஸிஃபா பேகம் சாஹிபாவின் மூத்த சகோதரி ஆவார்கள். இவர்களுக்கு மற்ற ஒரு சகோதரியும், மூன்று சகோதரர்களும் உள்ளனர்.

அன்னாரது சகோதரி அனீஸா ஃபவ்ஸியா சாஹிபா எழுதுகின்றார்கள்:

அன்னார் தமது பெற்றோர்களுக்கு மூத்த மகளாவார்கள். எனவே பெரும்பாலான முடிவுகளில் பெற்றோர்கள் அவர்களது கருத்திற்கு மிக முக்கியத்தும் கொடுத்து வந்தார்கள். ஏனென்றால் அவர்கள் மிகவும் புரியும் திறன் கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். தமது பெற்றோர்களின் நம்பிக்கையை அவர்கள் முழுமையாக நிறைவேற்றி வந்தார்கள். தமது சிறிய சகோதரி மற்றும் சகோதரர்களையும் கண்காணித்து வந்தார்கள். சிறந்த தர்பிய்யத்தை வழங்க முயற்சி செய்தார்கள்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: எனக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகனுடன் திருமண வரன் தொடர்பாக பேச்சு நடைபெற்றது. அப்போது முஸ்லிஹ் மவ்வூது அவர்கள், இது நல்ல குடும்பமாகும். இந்த குடும்பத்திலுள்ள இரண்டு சகோதரிகளும் எனது மருமகளாவார்கள் என்று கூறினார்கள். அதாவது ஒருவர் மரணித்த இவர் ஆவார். இவரைப் பற்றிதான் நான் குறிப்பிட்டு வருகின்றேன். இன்னொருவர் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மனைவி கூறுகின்றார்கள்: இந்த இரண்டு சகோதரிகளும் எனது மருமகளாவார்கள். மிகவும் அன்பு செலுத்தக்கூடியவர்கள் ஆவர். குடும்பங்களை இணைக்கக் கூடியவர்கள் ஆவர்.

அவர்களது மகன் எழுதுகின்றார்கள்: எனது தாய் மிகவும் எளிமையான, ஏழைகளுக்கு உதவி செய்யக்கூடியவராக இருந்தார்கள். ஏழைகளின் கஷ்டத்தில் பங்கெடுக்கக் கூடியவராக திகழ்ந்தார்கள். தேவையுடையவர்களின் தேவைகளை கருத்தில் கொள்வார்கள். அனுதாபத்துடன் நடந்து கொள்வார்கள். ஏழைகளுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வார்கள். அவர்களின் பேச்சைக் கேட்டு மிகவும் துக்கத்தில் ஆழ்ந்து விடுவார்கள். எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய முடியுமோ செய்வார்கள். இது அவர்களது சிறப்பம்சமாகும். இதில் எவ்வித கூடுதல் குறைவும் இல்லை. பணியாற்றுபவர்களிடமும் நல்ல நடத்தையை வெளிப்படுத்தினார்கள்.

எவ்வாறு குழந்தைகளைப் போன்று பணியாற்றுபவர்களிடம் நடந்து கொண்டார்கள் என்பது தொடர்பாக அவர்களது மகள் எழுதியுள்ளார்கள்: பணியாற்றக்கூடிய ஒரு பெண்மணிக்கு திருமணம் நடைபெற்றபோது அவர்கள் அன்னாரிடம் உங்களது மகளுக்கு நீங்கள் எவ்வாறு சீதனம் கொடுத்தீர்களோ அவ்வாறே எனக்கும் வேண்டும் என்று கூறினார்கள். எனவே அவர்கள் அவர்களுக்காகவும் அவ்வாறே செய்து கொடுத்தார்கள்.

அவர்களுக்கு மூன்று மகள்கள், ஒரு மகன் இருக்கின்றனர். மூஸிய்யா ஆவார்கள். நேற்று இவர்களது ஜனாஸா நடைபெற்றுள்ளது. பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அல்லாஹ் இவர்களது குழந்தைகளுக்கு தமது தாயின் நன்மைகளை மேற்கொள்வதற்கான நற்பேற்றை வழங்குவானாக. மேலும் அன்புடனும் நேசத்துடனும் இருப்பதற்கான நற்பாக்கித்தை வழங்குவானாக. மேலும் ஜமாஅத்துடனும், கிலாஃபத்துடனும் எப்போதும் தொடர்பு வைத்திருப்பவர்களாக ஆக்குவானாக.

# "சகிப்புத்தன்மை" சமூக வாழ்வில் இதன் முக்கியத்துவம்

(ஜுனைத் அஹ்மது வரய்ச், பாகிஸ்தான் – தமிழாக்கம்: செய்யது அன்வர் அஹ்மது, தூத்துக்குடி)

*(21 வது இதழின் தொடர்ச்சி…)*

லெபனானைச் (உலகில் மிக வேறுபாடுகள் கொண்ட, அதே வேளையில் அதிகமான பாதிப்பிற்குள்ளான நாடுகளில் ஒன்று) சார்ந்த Youth For Tolerence என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பு சகிப்புத்தன்மை குறித்து இவ்வாறு கூறுகிறது:

சகிப்புத்தன்மை என்பது நாம் ஒன்றுபட்டு சமாதானமாக வாழத் தேவையான ஒரு வலிமையான சக்தியாகும். அமைதி காலங்களில் மக்கள் சமூக ரீதியிலும், பொருளாதார வசதியிலும், எழுச்சியுடன் முன்னேற சந்தர்ப்பம் கிடைக்கிறது. சகிப்புத்தன்மை காரணமாக மக்கள் தாங்கள் தகுதியுடன் மதிக்கப்படுவதாக உணரக்கூடிய ஒரு சமூகம் உருவாகிறது. அதில் ஒவ்வொருவருடைய சுய சிந்தனைகள், எண்ணங்கள், கனவுகளுக்கும் இடம் உண்டு. அதன் காரணமாகவே நாம் சகிப்புத்தன்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நம்புகிறோம். ஏனெனில் இது ஒரு ஆரோக்கியமாக நல்ல முறையில் இயங்கும் ஒரு சமூகத்திற்கு அத்தியாவசியமானதாகும்.

உண்மையில் லெபனான் போன்ற (பல்வேறு அரசியலைக் கொண்ட, மதங்களைக் கொண்ட, பொருளாதார நிலைகளைக் கொண்ட) ஒரு நாடு, இந்த ஒரே வழியில்தான் செயல்பட முடியும். அதன் ஒவ்வொரு மாறுபட்ட நிலையையும் மக்கள் கஷ்டத்திற்கு ஆளாகாமல் சுபிட்சமாக வாழ உபயோகப்படுத்த வேண்டும்.

பலதரப்பட்ட கலாச்சாரம் கொண்ட மக்களுக்கு நடுவே கலாச்சார சகிப்புத்தன்மையை பேணுவது மிகவும் அவசியமானதாகும். ஒருவர் மற்றவரின் பண்பாட்டை தரம், நிறம், இனம் ஆகியவற்றைப் பார்க்காமல் மதிக்க வேண்டும். இக்காலகட்டத்தில் பிறருடைய உணர்வுக்கு மதிப்பளித்தல் தாராளமான பக்குவப்பட்ட நிலை காணப்படும் அதே வேளையில், கலாச்சாரம் சம்பந்தப்படும் இடங்களில் சகிப்புத்தன்மையில் குறைபாடு தென்படுகிறது. இதற்கு புதிய ஓர் எடுத்துக்காட்டு, பிரான்ஸ் நாட்டில் சில குறிப்பிட்ட இடடங்களில் முஸ்லிம் பெண்கள் புர்கா அணிய அனுமதியில்லை. நாம் சில நொடிப்பொழுது சிந்தித்துப் பார்ப்போம் என்றால், எவ்வாறு ஐரோப்பா பேச்சுரிமை வேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டு, இஸ்லாமிய கலாச்சாரத்திற்கெதிராக இவ்வாறு நடந்து கொள்கின்றது. இவை நிச்சயமாக சகிப்புத்தன்மை குறைபாட்டால் நிகழ்ந்தாகும்.

நாம் நமது சமூகத்தில் ஒவ்வொருவரையும் நம் சொந்த அங்கத்தினராக ஏற்றுக் கொள்ள வேண்டும். எந்த கலாச்சாரமாக இருந்தாலும் சரி சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றின்படி, ஒரு இந்து கலாச்சாம் முஸ்லிம் சமூகத்தில் இருந்தாலும் அல்லது ஒரு முஸ்லிம் கலாச்சாரம் இந்து சமூகத்கதில் இருந்தாலும் சரியே.

(ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் நூல் – சமாதானத் தூது)

அப்போதுதான் அந்த சமூகம் உயர்வான சகிப்புத்தன்மை கொண்டதாக கூறப்படும். உலகில் சமாதானத்தைக் குலைப்பதில் முக்கிய பங்கு வகிப்பது தன்னை அதிபுத்திசாலி, தாராள மனதைக் கொண்டவன் என கருதும் இவர்கள், மார்க்கத்தின் தோற்றுனர்களை ஏளனம் செய்வது, எள்ளி நகையாடுவதில் தடையின்றி செயல்படுகின்றனர். சமூகத்தில் அமைதி நிலவ, ஒருவர் தன் உள்ளத்தில் உள்ள எல்லா பகைமைகளையும் அகற்றி விட்டு, அவரின் சகிப்புத்தன்மையின் ஆற்றலை மேலோங்கச் செய்ய வேண்டும்.

மேலை நாடுகளிலும் கூட முஸ்லிம்களுக்கு எதிராக தடைகளை விதிப்பது எந்த சமாதானத்தையும் ஏற்படுத்தாது. ஏனெனில் அவைகளால் மட்டும் மக்களின் மனதையும், எண்ணங்களையும் மாற்ற இயலாது. இது முஸ்லிம்களுக்கு மட்டும் உரிய விஷயமல்ல. ஆனால் எப்போதெல்லாம் ஒரு நபர் பலவந்தமாக அவர் சார்ந்துள்ள மார்க்கம் அல்லது நம்பிக்கை காரணமாக நசுக்கப்படுகிறாரோ அப்போது அங்கு ஒரு எதிர்மறை விளைவு ஏற்படுகிறது. அதனால் அமைதி வெகுவாக பாதிக்கப்படுகிறது.

சிரியாவில் நடந்த போர் சகிப்புத்தன்மையின்மைக்கு ஒரு புதிய உதாரணமாகும். அரசாங்கங்கள் ஆட்சி அதிகாரம் என்னும் பசியில் இருக்கின்றன. அந்நோக்கத்தை அடைய அவை தேவையான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்கின்றன. சகிப்புத்தன்மையும், அமைதியும் அநேக பிரச்சனைகளுக்கு தீர்வாக அமைகின்றன. இதனை கடைபிடிப்பதன் மூலம் பல போர்களை முடிவுக்கு கொண்டு வந்து விடலாம்.

மக்கள் தம் இயல்பில் சகிப்புத்தன்மையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. இறைவன் இயல்பில் அன்பையும், அடக்கத்தையும் அவனது படைப்பினங்களின் உள்ளத்தில் நிலைபெறச் செய்துள்ளான். எப்போது இந்த பிரச்சனை வருகிறதென்றால், அவர்கள் அறியாமையில், கல்வி அறிவைப் பெற முடியாமல் இருக்கின்றபோது, இது சமூகத்தில் மதிப்பை புரிந்து கொள்ள இயன்றியமையாததாக உள்ளது. அங்கு குழப்பமும், சகிப்புத்தன்மையின்மையும் உருவாகி விடுகிறது.

சகிப்புத்தன்மையை நிலைபெறச்செய்ய ஒரு வழி மதங்கள் குறித்த தப்பெண்ணத்தை அகற்றி விட வேண்டும். அன்மீகத் தலைவர்கள் வெறுப்பை விதைப்பதை விட சகிப்புத்தன்மையயை ஊக்குவித்தால் இந்த பூமி சிறந்த இடமாக மாறிவிடும். மார்க்கத்தை தவறாக பயன்படுத்தினால் அதனை ஓர் ஆயுதமாக ஆக்க முடியும். ஆனால் அதனை அறிவார்ந்த முறையில் செயல்படுத்தினால் சமூகத்தில் அன்பையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த இதுவே சிறந்த வழியாகும். எனவே எல்லோரிடத்தும் அன்பு; எவர் மீதும் பகையில்லை போன்ற முழக்கங்கள் அமைதியை, சகிப்புத்தன்மையை முன்னேறச் செய்ய இன்றைய சமூகத்திற்கு தேவைப்படுகிறது.

பேச்சு சுதந்திரம் என்பது கேள்விக்குரிய ஒன்றில்லை. ஏனென்றால் அது அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகும். ஒவ்வொருவருக்கும் அவர் விரும்புவதை பேசுவதற்கான உரிமை உண்டு. ஆனால் பிறரது உணர்வுகளையும், விழுமியங்களின் எல்லையையும் தாண்டிவிடக்கூடாது. ஒருவர் பேசும் போது நன்கு யோசனை செய்து பேச வேண்டும். ஏனெனில் வார்த்தைகள் ஒருவரின் உள்ளத்தில் சில நொடிப்பொழுதில் பாய்ந்து நீங்கா வடுவை ஏற்படுத்திவிடும்.

அநேக சமயங்களில் மக்கள் அவர்களின் மார்க்கம் குறித்த, புனித தலைவர்கள் குறித்த அல்லது அவர்கள் எதனை புனிதம் எனக் கருதுகிறார்களோ அதைப்பற்றி மற்றவர்களின் தீய வார்த்தைகளால் பரஸ்பரம் வெறுப்பு உண்டாவதை நாம் காண்கிறோம்.

தனி நபரின் எண்ணங்களை மாற்றுவதற்காக வழிவகைகளைச் செய்ய அரசாங்கங்களுக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு செய்யும் போது ஒற்றுமையை நிலைநாட்ட முடியும். எந்த அரசும் சமூகத்தில் சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தை நிராகரிக்க முடியாது. ஏனெனில் சகிப்புத்தன்மை, ஏற்றத்தாழ்வு என்னும் தடையை அகற்றி சமூகத்தில் ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்தவர்களையும் ஒரே நிலைக்கு கொண்டு வந்து விடும். அரசுகள் சகிப்புத்தன்மைக்கு மாற்றமாக நடப்பவர்கள் தமது செயல் மற்றும் பேச்சின் மூலமாக வெறுப்பைத் தூண்டுபவர்களுக்கு எதிராகச் சட்டம் இயற்ற வேண்டும்.

ஒரு நபர் அல்லது ஒரு குழுவினர் பொறுமை செய்வது, மற்றவர்களுக்காக ஏற்றுக் கொள்வது, அதே வேளையில் மற்ற பிரிவினர் அவ்வாறு செய்யாமலிருப்பது என்பதற்கு பெயர் சகிப்புத்தன்மையல்ல. மக்கள் சில விவகாரங்களில் மறுப்பை வெளிப்படுத்துகின்றபோது அவர்கள் தம் எண்ணங்களை கண்ணியமான விதத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். வெறுப்புள்ள, கோபமூட்டும் வார்த்தைகளை தவிர்க்க வேண்டும். பிரச்சனைகளில் இரு தரப்பினரும் சகிப்புத்தன்மையைக் கைக்கொள்வது நல்ல விளைவைத் தரும்.

இங்கு ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். அடுத்தவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பும், சகிப்புத்தன்மையும் காண்பிக்கும் அதே வேளையில் உங்களது கொள்கைகளை தேவையின்றி விட்டுக் கொடுக்க வேண்டும் அல்லது விருப்பமின்றி அவர்களின் எண்ணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இதற்கு பொருள் அல்ல. இது அடிப்படை மனி உரிமைகளைச் சார்ந்த நடைமுறையாகும்.

ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை என்னவெனில் அவர்களின் மன விவகாரங்களுக்கும், உணர்வுகளுக்கும் பங்கம் விளைவிக்க வரம்பு மீறக்கூடாது. மேலும் அவற்றை அங்கீகரிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கருத்தில் நம்பிக்கை வைக்கவும் அதனை வெளிப்படுத்தவும் உரிமை உண்டு. (முற்றும்)

(அல்ஹகம் ஆங்கில வார இதழ் 13 ஏப்ரல் 2018)

## குறிப்பாக செய்ய வேண்டிய துஆக்கள்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 15.06.2018 அன்று லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய குத்பா ஜுமுஆ பேருரையில் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள துஆக்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களை எடுத்துக் கூறியவாறு இன்றைய நாட்களில் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை ஓதி வருமாறு வழிகாட்டியுள்ளார்கள். அந்த துஆக்களிலிருந்து....

رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. (2:202)

رَبَّنَآ اَفۡرِغۡ عَلَيۡنَا صَبۡرًا وَّتَوَفَّنَا مُسۡلِمِيۡنَ

எங்கள் இறைவா! எங்களுக்கு பொறுமையினை வழங்குவாயாக. மேலும் (உனக்கே) கட்டுப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்ற நிலையிலே எங்களுக்கு நீ மரணத்தை தந்தருள்வாயாக. (7:127)

رَبَّنَآ اٰمَنَّا بِمَآ اَنۡزَلۡتَ وَاتَّبَعۡنَا الرَّسُوۡلَ فَاكۡتُبۡنَا مَعَ الشّٰهِدِيۡنَ

எங்கள் இறைவா! நீ இறக்கியதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் இத்தூதரை பின்பற்றுகிறோம். எனவே நீ எங்களை உண்மைக்கு சாட்சி சொல்பவர்களுடன் எங்கள் பெயரை பதிவு செய்வாயாக. (3:54)

رَبَّنَا لَا تُزِغۡ قُلُوۡبَنَا بَعۡدَ اِذۡ هَدَيۡتَنَا وَهَبۡ لَنَا مِنۡ لَّدُنۡكَ رَحۡمَةً ‌ۚ اِنَّكَ اَنۡتَ الۡوَهَّابُ

எங்கள் இறைவா! எங்களுக்கு நேர்வழி காட்டிய பிறகு எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبِّ هَبۡ لِىۡ مِنۡ لَّدُنۡكَ ذُرِّيَّةً طَيِّبَةً ‌ۚ اِنَّكَ سَمِيۡعُ الدُّعَآءِ

என் இறைவா! நீ எனக்கு உன்னிடமிருந்து தூய்மையான சந்ததியைத் தந்தருள்வாயாக. நிச்சயமாக நீ வேண்டுதலை ஏற்றுக் கொள்பவனாவாய். (3:39)

رَبَّنَا هَبۡ لَنَا مِنۡ اَزۡوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعۡيُنٍ وَّاجۡعَلۡنَا لِلۡمُتَّقِيۡنَ اِمَامًا

எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக. மேலும் இறையச்ச முடையவர்களுக்கு முதன்மையானவர்களாக ஆக்குவாயாக. (25:75)

رَبِّ هَبۡ لِىۡ مِنَ الصّٰلِحِيۡنَ

என்னுடைய இறைவா! நீ எனக்கு நல்லடியார்களை எனக்கு வாரிசாக்குவாயாக. (அஸ் ஸஃப்பாத்:101)

رَبِّ اِنِّىۡ لِمَاۤ اَنۡزَلۡتَ اِلَىَّ مِنۡ خَيۡرٍ فَقِيۡرٌ

என் இறைவா! நிச்சயமாக எனக்கு நன்மையிலிருந்து நீ எதை வணங்கினாலும் அதனை நான் இரப்பவனாக உள்ளேன். (28:25)

رَبِّ اَعُوۡذُ بِكَ مِنۡ هَمَزٰتِ الشَّيٰطِيۡنِ ۙ وَاَعُوۡذُ بِكَ رَبِّ اَنۡ يَّحۡضُرُوۡنِ

நீர் கூறுவீராக. என் இறைவா! கிளர்ச்சியாளர்களுடைய தீங்கிலிருந்து நான் பாதுகாப்பு தேடுகின்றேன். என் இறைவா! அவர்கள் என் முன் வருவதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன். (23:98,99)

رَبِّ زِدۡنِىۡ عِلۡمًا

என் இறைவா! எனக்கு அறிவை வளரச் செய்வாயாக. (20:115)

رَبِّ اشۡرَحۡ لِىۡ صَدۡرِىۡ ۙ وَيَسِّرۡ لِىۡۤ اَمۡرِىۡ ۙ وَاحۡلُلۡ عُقۡدَةً مِّنۡ لِّسَانِىۡ ۙ يَفۡقَهُوۡا قَوۡلِىۡ

என் இறைவா! என் உள்ளத்தை விரிவுபடுத்துவாயாக. என் பணியை எனக்கு எளிதாக்குவாயாக. என் பேச்சிலுள்ள திக்கலை அகற்றுவாயாக. (அவ்வாறாயின்) அவர்கள் என் பேச்சை (எளிதாகப்) புரிந்து கொள்வர். (20:26–29)

رَبَّنَآ اٰتِنَا مِنۡ لَّدُنۡكَ رَحۡمَةً وَّهَيِّئۡ لَنَا مِنۡ اَمۡرِنَا رَشَدًا

எங்கள் இறைவா! நீ எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக.மேலும் எங்களது விஷயத்தில் நேர்வழியை எளிதாக்கி தருவாயாக. (18:11)

رَبِّ اَدۡخِلۡنِىۡ مُدۡخَلَ صِدۡقٍ وَّاَخۡرِجۡنِىۡ مُخۡرَجَ صِدۡقٍ

وَّاجۡعَلۡ لِّىۡ مِنۡ لَّدُنۡكَ سُلۡطٰنًا نَّصِيۡرًا

எங்கள் இறைவா! நீ நல்ல முறையில் என்னை (மீண்டும் மக்காவிற்குள்) நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் வகையில் (மக்காவிலிருந்து) என்னை வெளியேறச் செய்வாயாக. மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாளராகவும் விளங்கும் ஒருவரை வழங்குவாயாக. (17:25)

رَبِّ ارۡحَمۡهُمَا كَمَا رَبَّيٰنِىۡ صَغِيۡرًا

அதாவது என் இறைவா! நான் குழந்தையாக இருந்த போது என்னை வளர்த்தது போல் நீ எனது பெற்றோரிடம் கருணை காட்டுவாயாக. (17:25)

رَبِّ اِنِّىۡ ظَلَمۡتُ نَفۡسِىۡ فَاغۡفِرۡ لِىۡ

எங்கள் இறைவா! நிச்சயமாக நான் எனது நஃப்ஸின் மீது அநீதியிழைத்து விட்டேன். ஆகவே என்னை மன்னித்தருள்வாயாக.

رَبَّنَآ اَتۡمِمۡ لَنَا نُوۡرَنَا وَاغۡفِرۡ لَنَا ۚ اِنَّكَ عَلٰى كُلِّ شَىۡءٍ قَدِيۡرٌ

எங்கள் இறைவா! எங்கள் ஒளியை முழுமையாக்கி எங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக நீ எல்லாவற்றிற்கும் பேராற்றல் உடையவனாவாய். நீ எதை விரும்புகின்றாயோ அதை செய்வதற்கு நிரந்தரமான ஆற்றல் உடையவனாவாய். (66:9)

رَبَّنَآ اٰمَنَّا فَاغۡفِرۡ لَنَا وَارۡحَمۡنَا وَاَنۡتَ خَيۡرُ الرّٰحِمِيۡنَ

எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்களை மன்னித்து எங்கள் மீது கருணை காட்டுவாயாக. நீ கருணை காட்டுபவருள் சிறந்தவனாவாய். (2:210)

رَبَّنَا ظَلَمۡنَاۤ اَنۡفُسَنَا وَاِنۡ لَّمۡ تَغۡفِرۡ لَنَا وَتَرۡحَمۡنَا لَنَكُوۡنَنَّ مِنَ الۡخٰسِرِيۡنَ

எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டவாளிகளை சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

رَبَّنَا لَا تَجۡعَلۡنَا مَعَ الۡقَوۡمِ الظّٰلِمِيۡنَ

எங்கள் இறைவா! எங்களை அநீதியிழைக்கும் சமுதாயத்தை சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக. (7:48)

رَبِّ لَا تَذَرۡنِىۡ فَرۡدًا وَّاَنۡتَ خَيۡرُ الۡوٰرِثِيۡنَ

என் இறைவா! என்னை தனித்தவனாக விட்டுவிடாதிருப்பாயாக. வாரிசாக இருப்பவர்களுள் நீயே மிகச் சிறந்தவனாவாய். (21:90)

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 06 June 2019 Issue No. 23

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் 2019 –ற்கான மாணவர் சேர்க்கை

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட இந்த அருளுக்குரிய ஜாமிஆவிலிருந்து தற்போது வரை நூற்றுக்கணக்கான மார்க்க அறிஞர்களும், கண்ணியத்திற்குரிய ஆலிம்களும் வெளிவந்து முழு உலகிற்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைக் கொண்டு சேர்ப்பதில் தமது கடமையை நிறைவேற்றி வருகின்றனர். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அருளுக்குரிய மார்க்க நிறுவனத்தில் மார்க்கக் கல்வியைப் பெற்று மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

எனவே ஹுஸூர் அவர்களின் மேற்கோளின் ஒளியில் அதிகம் அதிகமான வாக்கிஃபே நவ் மற்றும் வாக்கிஃபீனே நவ்வைச் சாராத மாணவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்து மார்க்கக் கல்வியைப் பெற்று மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு தம்மைத்தாமே அர்ப்பணிக்க வேண்டும். எனவே ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இணைய விரும்புபவர்கள் இந்திய வக்ஃபே நவ் துறையைத் (நஸாரத் தஃலீம்) தொடர்பு கொள்ளவும். மேலும் விரைவாக சேர்க்கைப் படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து ஜூன் 30 ஆம் தேதிக்குள் இந்திய வக்ஃபே நவ் (நஸாரத் தஃலீம்) அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நுழைவுத் தேர்வு 15 ஜூலை 2019 அன்று நடைபெறும்.

**சேர்க்கைக்கான நிபந்தனைகளாவன:**

1. மெட்ரிக் தேரியவருக்கு 17 வயதும், +2 தேரியவருக்கு 19 வயதும் இருக்க வேண்டும். திருக்குர்ஆன் மனனம் செய்தவருக்கு விதிவிலக்காக சலுகையும் உண்டு.

2. *National Carieer Planing Committee wa[1]fe nau Bharat* ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நுழைவுத் தேர்வில் பங்கு பெறும் மாணவர்களிடம் எழுத்துத் தேர்வை நடத்தும். பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு தேர்ந்தெடுக்கும். எழுத்துத தேர்வில் திருக்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாம், அஹ்மதிய்யத், மார்க்க அறிவுகள், அரபி, உர்து, கணிதம், ஆங்கிலம் மற்றும் பொது அறிவு *(General Knowledge)* தொடர்பான கேள்விகள் கேட்கப்படும்.

3. எழுத்துத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர் நூர் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை நடைபெறும். மாணவரின் எழுத்துத் தேர்வு மற்றும் மருத்துவ பரிசோதனையில் *Medical Report* திருப்திகரமாக இருக்கும் நிலையில் பிறகு ஹுஸூர் அவர்களின் ஒப்புதலுக்குப் பிறகு ஜாமிஆவில் சேர்க்கப்படுவார்.

4. கிராஜுவேட் செய்துள்ள மாணவர்களுக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் முன்னுரிமை வழங்கப்படும்.

மாவட்ட அமீர்மார்கள், ஜமாஅத்தின் அமீர்மார்கள், சத்ர் ஜமாஅத், முபல்லிக்மார்கள், முஅல்லிம்மார்களிடம் விண்ணப்பிக்கப் –படுவதாவது, நல்ல, தகுதி வாய்ந்த மார்க்க அறிஞர்கள் மற்றும் முபல்லிக்குகள் ஆவதற்குரிய மனவளமும், திறமையும், மார்க்கத் தொண்டாற்றும் உணர்வும் கொண்ட, நன்மையின் பால் ஈர்ப்புள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து சேர்க்கைக்கான பாடத்திட்டத்தை நன்றாக ஆயத்தம் செய்வித்து, குறிப்பிட்ட தேதிக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு அனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். மேலும் அத்தகைய மாணவர்களின் சேர்க்கைப் படிவத்தை விரைவாக பூர்த்தி செய்து இந்திய வக்ஃபே நவ் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். சேர்க்கைப் படிவத்தை *Email* மூலமாக பெற்றுக் கொள்வதற்கான *Mail Id: waqfenau@qadian.in*

*INCHARGE WAQF-E-NAU DEPARTMENT*
*OFFICE WAQF-E-NAU INDIA (NAZARAT TALEEM)*
*M.TA BUILDING, CIVIL LINE, QADIAN*
*DISTRICT: GURDASPUR, PUNJAB (INDIA) PIN:143516*
*CONTACT: 01872-500975, 9988991775*

(நாஸிர் தஃலீம் & சத்ர் நேஷனல் பிளானிங் கமிட்டி வக்ஃவே நவ் பாரத்)

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad